1996 ஆகஸ்டு 5]

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ஆம் ஆண்டு இந்த ஏரியில் நடத்தப்பட்ட படகு 'சர்வீஸ்', நீண்ட நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருந்த காரணத்தால், இந்த படகு 'சர்வீஸ்' வசதி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 86, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

86—

கதர்த்துணி-கிராமத் தொழில் பொருட்கள் ஏற்றுமதி

*662—**திரு. துரை. சந்திரசேகரன் :**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் கதர்த்துணி மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

(ஆ) அதற்காக மத்திய அரசு ஊக்கத் தொகை ஏதேனும் வழங்குகிறதா ?

மாண்புமிகு திரு. ஆந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் உற்பத்தியாகும் கதர் கிராமத் தொழில் பொருட்கள் (பனைநார் பொருட்களைத் தவிர) இதுவரை எந்த நாடுகளுக்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ஏற்றுமதி செய்யப்படவில்லை.

(ஆ) மத்திய அரசு எந்தவித ஊக்கத் தொகையையும் ஏற்றுமதிக்காக இதுவரை வழங்கவில்லை.

திரு. துரை. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஏற்றுமதி செய்யப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்றுமதி செய்வதற்கு

மைய அரசாங்கத்திடம் அனுமதிபெற அரசின் சார்பில் மீண்டும் முயற்சிகள் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முயற்சி செய்வீர்களா எனக் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 87, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

87—

மீன் பிடிக்கும் உரிமம் வழங்குதல்

*1098—**திரு. ஜி.கே. மணி :**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதியிலுள்ள மீன் பிடிக்கும் தொழில் செய்பவர்களுக்கு மேட்டூர் நீர்த் தேக்கத்தில் மீன் பிடிக்கும் உரிமம் நடப்பு ஆண்டில் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடப்பு ஆண்டில் புதியதாக மீன்பிடிக்கும் உரிமம் வழங்கப்படவில்லை. எனினும் இப்பகுதி மீனவர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப் பெற்றால், அதனை ஆய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உரிமம் வழங்க வேண்டுமெனில் அவர்கள் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி.கே. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கத்திலே கிடைக்கக்கூடிய மீனானது, சுவை மிகுந்த மீன். எல்லோரும் விரும்பிச் சாப்பிடக்கூடிய மீன். அதிலும் குறிப்பாக,